RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s640

OPEN ACCESS

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஈகை

## ம. ரேவதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Charity of Patinenkil Kanakku Nulkal

## M. Revathi [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem–636 011, Tamil Nadu, India

* Corresponding Author: revathim@gamil.com

Received: 14-10-2021
Revised: 29-04-2022
Accepted: 09-05-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Voluntary help is the charity. Only by adding material. The doesn't mean you have to help. The big charity is the one who uses what he does not need for his life and gives the rest to others. Eleven accounts best illustrate this equivalence of giving to the other side of receipt. But in our lives, we adhere to giving as soon as we receive something. the best quality is to give in advance to other as you would to point out what is being done in this world is for the hereafter our ancestors considered it unethical to expect that. Compassion makes a gift realizes that Mallam. In this world we are the glory off the charity that lasts after death.

**Keywords:** Charity, Equivalent, Voluntary, Adhere, Unethical, Compassion, Realizer, Glory.

## முன்னுரை

வாழ்க்கை முழுவதும் கொடுத்தல் பெறுதல் என்ற இரு நிகழ்வும் நடந்துகொண்டே இருக்கின்றன. மக்கள் பெறுதலில் அடையும் மகிழ்ச்சி கொடுத்தால் இருப்பதில்லை. கொடுப்பது எவ்வளவு என்பதல்ல கணக்கு கொடுக்கப்பட்ட பொருளின் தரமல்ல முக்கியம் கொடுக்கின்ற உள்ளத்தில் சுரக்கின்ற பாவமே (உணர்ச்சியே) முக்கியம் என்பது கூற்று. பெறுதலின் மறுபக்கமே கொடுத்தல். ஆனால் நாம் ஒன்றை பெற்றபிறகே கொடுத்தல் என்பதை நம் வாழ்வில் கடைபிடிக்கிறோம். நம் தேவையை நிறைவேற்றிக் கொண்டு எதிர்காலத்திற்கு மிச்சம் வைத்துவிட்டு மீதியை தேவைப்படுவோருக்கு கொடுத்துதவ வேண்டும்.

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதிய மில்லை உயிர்க்கு”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். அதாவது “வரையாது வழங்கும் வண்மை. அதாவது ஈகை போலாது செல்வமேயன்றி உயிரும் உடம்புமாகிய பொருள்யாவற்றையும் வழங்குதல் ஆகும்” என்கிறார் (Parimelzhagar, 2007). கொடை என்பது செல்வம் பொருள் கொடுப்பது மட்டுமல்ல உயிரும் உறுப்பும் முதலானவற்றையும் கொடுப்பது ஆகும்.

## ஈகையின் சிறப்பு

குறிப்பறிந்து செயல்படுதல் போல பிறர் வேண்டும் முன்னரே கொடுத்துதவுதல் சிறந்த பண்பாகும்.

“இலன் என்னும்வ்வம் உரையாமை ஈதல்

குலன் உடையான் கண்ணேஉள”

என்ற குறள் இல்லை என்று வந்து கேட்பதற்கு முன்னே அவனுக்குக் கொடுத்துதவுவது நற்குடிப் பிறந்தவனிடம் காணப்படுகின்ற சிறந்த குணமாகும். “ஒரு பண்பு காலங்கடந்து நிற்கிறது என்றால் அது அறப்பண்பாகத்தான் இருக்க முடியும் என்பதைத் தெரியலாம் (Parimelzhagar, 2007). இம்மையில் செய்வது மறுமைக்காகத்தான் என்று எதிர்பார்த்துச் செய்வது அறமன்று என்று கருதினர் நம் முன்னோர். அதனால்தான் யாருக்கு ஈய வேண்டுமென்றால் எதுவுமில்லாத வறியவர்களுக்கு மட்டும் தான் மற்றவர்களுக்கு ஈந்தால் அது தன்னலமாகிவிடும் என்றும் கூறினர். இத்தகை பண்பு அறப்பண்பாகக் கொள்ளப்பட்டது” செல்வத்தின் பயன் ஈதல் என்று கூறினர். ஈவதல் புகழ் உண்டாகும் (Durai Pattabiraman, 2005).

“ஈரம் உடைமை ஈகையின் அறிய”

என்னும் அடி ஒருவர் இயல்பாக இரக்ககுணம், கருணை உள்ளம் கொண்டவன் என்பதை அவர் மற்றவர்க்குக் கொடுத்துதவும் குணத்தைக் கொண்டே அறியமுடிகிறது (Durai Pattabiraman, 2005). “நாம் இறந்த பின்னும் இவ்வுலகத்தில் நெடுங்காலம் வரை நிலைத்து நிற்பது புகழே ஆகும். அதனைப்பெற வசை நீக்கி இசை வேண்டியும் வசை வேண்டாது நன்மொழி வாயிலாக அறிவுறுத்துகின்றது”. பிறப்பிலேயே கொடை குணம் பிறந்துவிடுகிறது. இரக்கத்தால் கொடை உண்டாகிறது.

“இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பில்லை”

இவ்வடி இல்லை என்று வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது கொடுத்துதவி அவர்தம் பசித்துன்பத்தைத் தீர்ப்பதிலும் மேலான சிறந்த செயல் வேறில்லை. கொடைச்சிறப்பை விட பெருஞ்சிறப்பு ஒன்றுமில்லை. “மற்றவர்களுக்கு எதையும் கொடுத்தபிறகு நமது புகழ் பூவின் மணம்போல் தானாக பரவ வேண்டும்” கொடை கொடுப்பதனால் பெருமிதம் உண்டாகும் வாசனை போல் புகழ் உண்டாவதால் (Durai Pattabiraman, 2005).

## அரசாள்வான்

அவரவர் தகுதியறிந்து இயல்பறிந்து கொடை கொடுக்கும் தன்மையுடையவர்கள் தனிச்சிறப்போடும் பெருமிதம் கொள்கின்றனர்.

“எண்ணம் ஆய்மாதவர்க்கு ஊண் ஈந்தான் வைசிர

வண்ணனாய் வாழ்வான் வகுத்து”

இவ்வடிகள் தவத்தோர்க்கு ஆவின்நெய் பெய்த உணவும் ஏனையோர்க்கு யானை குதிரை முதலானவைகளும் வழங்குகின்றவன். குபேரனைப் போல் பெருஞ்செல்வமுந் தன்மதிப்பும் உடையவனாவான். மன்னராக இருப்பினும் வறியவர் தகுதியறிந்து கொடை கொடுத்து பெருமிதம் கொள்கின்றனர். “ஒருவர் தம்மால் கொடுக்கக்கூடியதைக் கொடுக்க இயலும் என்று கூறிக் கொடுத்தாலும் கொடுக்க இயலாததைக் கொடுக்க இயலாது என்று சொல்லி மறுத்தலும் என்ற இந்த இரண்டும் கொடைத்தன்மையுடையவரின் இயல்புகள்”. இதனால் ஈகையின் இயல்பையும் ஈகையாளரின் பண்பும் அறியமுடிகிறது (Durai Pattabiraman, 2007).

## இரவாது ஈதல்

தன் தேவைக்கேற்ப வைத்துக் கொண்டு எதிர்காலத்திற்கு மிச்சம் வைத்து ஏனையப் பொருட்களை மற்றவர்களுக்கு இரக்காமலே கொடுப்பவன் சிறந்த ஈகையாளன்.

“உடையான் வழக்கினிதே”

இவ்வடி பொருளுடையவன் கொடுத்துதவுவது சிறந்தது (Bhavalareru Balasundaram, 2000).

"எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்"

இவ்வடி எள்ளவாயிருப்பினும் யாசிக்காமல் கொடுத்தல் சிறந்து ஈகையாகும் (Bhavalareru Balasundaram, 2000). "கடவுளிடமிருந்து நமக்குக் கூடுதலாகக் கிடைத்ததைத் தான் நாம் தேவைப்பட்டவருக்கு வழங்குகிறோம். நாம் கடை ஊழியர் போன்றவர்களே எனவே மிகை உயர்வு மனப்பான்மையை நமக்கு ஏற்படக்கூடாது. கொடுப்பவன் தான் பாக்கியசாலியே தவிர பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்மசிந்தனையையும் இரக்க மனப்பான்மையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்தற்காக நீ நன்றியுள்ளவனாக இரு" என்று மொழிகிறார்.

"தொடுத்து இன்னர் என்னலோ வேண்டா கொடுப்பவர்

தாம் அறிவார் தம்சீர் அளவு"

இவ்வடிகள் ஒன்றைக் கேட்பவர் தன்மை என்ன, தகுதி என்ன என்றெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாம் தருபவர்கள் அவர்கள் தகுதி அறிந்து தருவார்கள். தருபவர் தகுதி, பெறுபவர் பெருமை என்பதை விளக்குகிறது. இல்லை என்று வந்தவர்களுக்கு இரக்காமலே கொடுப்பதுதான் கொடை, எதிர்பார்த்து கொடுப்பது அறமல்ல. சிறந்த கொடையும் ஆகாது. பிறப்பிலேயே கொடை குணம் பிறந்து விடுகிறது. இரக்கத்தில் உண்டாகிறது. கொடை, அன்பு, கருணை உள்ளம் கொண்டவர்களுக்கு இயல்பாக கொடை குணம்" இருக்கும். கொடுப்பவர் தகுதியறிந்து கொடை கொடுப்பவர். கடவுள் நமக்கு கொடுப்பதை தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொண்டு எதிர்காலத்திற்கும் மிச்சம் வைத்துக் கொண்டு எஞ்சி இருப்பதை மற்றவர்களுக்கு கொடுத்துதவுவது கொடையாகும் (Sridharan, 2009).

## முடிவுரை

மன்னர், செல்வந்தர், கொடையாளி இவர்கள் மட்டும் கொடை கொடுப்பவர்கள் அல்ல. கருணை இரக்க குணம் உடையவர்களும் தான் கொடையாளிகள்தான். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் கொடுக்க வேண்டும் என்பதல்ல கொடை, பசித்து வந்தவர்களுக்கு வயிற்று உணவிடுதல் சிறந்த கொடை, உடை கொடுப்பது வயதானவர்களுக்கு உதவுவது. பிணியுற்றவர்களுக்கு பணிச் செய்வது இவையும் சிறந்த கொடையாகும். கொடைச் சிறப்பைவிட பெருஞ்சிறப்பு வேறொன்றுமில்லை என்பதை பதினெண் கீழ்க்கணக்கு வெளிப்படுத்துகிறது.

## References

Bhavalareru Balasundaram, S. (2000) Tholkappiyam Porulathikaram, New Century book House, Chennai, India.

Durai Pattabiraman, (2005) Valviyal Payanaam, Paari Nilaiyam, Chennai, India.

Durai Pattabiraman, (2007) Valviyal Unmaikal, Paari Nilaiyam, Chennai, India.

Parimelzhagar, (2007) Thirukkural, Thirunelveli Thenninthiya Saiva Sithantha Nurpathippu Kalagam, Chennai, India.

Sridharan, N. (2009) Valkai Panbugal, manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License